முருகப்பெருமான் துணை

**மகான் சிவவாக்கியர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.11.2022**, வெள்ளிக்கிழமை

1. யோகசித்தே ஆறுமுக அரங்கா
உலகை காக்க அவதாரம் புரிந்த
யோக ஞானியே ஞான தேசிகா
உன்பெருமை கூறி உலகினில்
2. உலகினில் சுபகிருது துலை திங்கள்
உயர்வான இருபானை திகதி புகர்வாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 25 ம் நாள், 11.11.2022 வெள்ளிக்கிழமை)
கோலமதாய் அனுகூல ஆசிதனை
கூறிடுவேன் சிவவாக்கியர் தானும்
3. தானுமே உலகநலம் காண உரைப்பேன்
தருமபலம் நிறைந்து வருக
ஞானலோகம் ஆகும் தானாய்
ஞானிகளை வணங்கி வருக
4. வருகவே ஞானிகள் அடைந்த
வரமாக உள்ள அழியாமையை
பேருலக மக்களும் அடைந்து
பிறவாப்பேறு காணக் கூடும்
5. கூடவே சன்மார்க்க பலம்
குருவருள் பலமென ஆற்றல்
திடமாக நாளும் நாளும் பெருக
திருவருளாக முருகன் அருள்
6. அருள் கண்டு திளைப்பர்
அரங்க ஞானி வழிகாட்டலில்
இருள் மாயையோடு எல்லாவித
இடர்களையும் வென்று மீள்வர்
7. மீள்வர் ஞானவான்கள் ஆக
மேலவர்கள் துணை பெருக்கி
ஆள்வர் ஞான வழிகாட்டலாக
அகிலமெங்கும் ஞான ஆட்சி
8. ஞான ஆட்சி நிறுவி நின்று
நம்பிக்கையூட்டி உலக மக்களை
ஞானவான்கள் படை நிறைந்த
ஞானபண்டிதன் தலைமை கொண்ட
9. கொண்டநல் உலகமாகவே
குருவரங்கன் அவதார மகிமை
தொண்டாக எங்கும் கலந்திட
தொடர் சேவை ஆற்றி மகிழ்வர்

10. மகிழ்வுற மும்மலக் குற்றமின்றி
மனபலம் தேகபலம் கூடி
அகிலம் தனில் சேவை வழி
அனைத்து மாற்றமும் நிகழ்த்துவர்

11. நிகழ்த்துவர் ஞானிகள் ஆட்சியை
நீதி காக்கும் ஞான ஆட்சியாக
செகத்தோர் அரங்கன் வழிவர
செப்பிடுவேன் அற்புதம் படைப்பர்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–